## சுருக்கம்

பள்ளிக் கல்வி - பொது நூலகங்கள் – 2021 - 2022-ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - "செந்தமிழ் சிற்பிகள் அரங்கம்" அமைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

### பள்ளிக் கல்வித் (பொ.நூ.2) துறை

அரசாணை (நிலை) எண். 145

நாள் 22.10.2021.
திருவள்ளுவராண்டு, 2052,
பிலவ வருடம், ஐப்பசி 05.

படிக்கப்பட்டவை :-

1. 2021-2022-ஆம் ஆண்டு பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை எண்.43-இல் மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 26.08.2021.
2. பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண்.5803/எ1/2021, நாள் 11.10.2021.

-------

**ஆணை:**

26.08.2021 அன்று 2021-22-ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின் போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் ஏனையவற்றுள் வரிசை எண்.5-இல் "செந்தமிழ் சிற்பிகள் அரங்கம்" என்ற தலைப்பில் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

> "தமிழ்மொழிக்கு அளப்பரிய பங்காற்றிய எழுத்தாளர்கள் மற்றும் தமிழறிஞர்களைப் போற்றும் வகையிலும், அத்தகைய அறிஞர் பெருமக்களை இளம் தலைமுறையினர் முன்மாதிரியாகக் கொள்ளும் வகையிலும், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் "செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்" அமைக்கப்படும். இந்த அரங்கத்தில் சாகித்ய அகாதமி விருது, ஞானபீட விருது போன்ற உயரிய விருதுகளைப் பெற்ற தமிழ் எழுத்தாளர்களின் புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் படைப்புகள் காட்சிப்படுத்தப்படும். இளம் தலைமுறையினரின் எழுத்தார்வத்தைத் தூண்டும் வகையில் மேற்கூறிய படைப்பாளிகளின் படைப்புகள் சார்ந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படும்."

//த.பி.பா.//

2. மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பொது நூலக இயக்குநர் "**செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்**" ஏற்படுத்துவதற்கான செயல் நிலைகள் குறித்து கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

(i) அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், 2வது தளத்தில், தமிழ் நூல்கள் பிரிவில் செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம் அமைக்கப்படும். இவ்வரங்கத்தில் வைக்கப்பட வேண்டிய தமிழ் மொழிக்கு பங்களித்த காலம் சென்ற தலைவர்கள் மற்றும் படைப்பாளிகள், விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்களின் புகைப்படங்கள் மற்றும் படைப்புகள், அவர்களைப் பற்றிய சிறுகுறிப்பு, அவர்களின் கையெழுத்து மற்றும் கையெழுத்துப் பிரதிகள் போன்றவற்றை தேர்ந்தெடுத்து அவர்களின் புகைப்படம், கையெழுத்துப் பிரதிகள் சேகரித்தல் மற்றும் இவற்றை அழகுற காட்சிப்படுத்துதல் போன்ற இவ்வரங்கம் அமைப்பது சார்ந்த திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்திட கீழ்க்கண்டவாறு 9 நபர்களைத் (தமிழ்மொழி சார்ந்த வல்லுநர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள்) கொண்டு "**செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கக் குழு**" ஒன்று அமைக்கப்படும்.

| | |
|---|---|
| (1) இயக்குநர், பொது நூலக இயக்ககம் | - தலைவர் |
| (2) முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலர், அண்ணா நூற்றாண்டு நூலகம் | - செயலர் |
| (3) துணை முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலர், அண்ணா நூற்றாண்டு நூலகம் | -உறுப்பினர் |
| (4) நூலகர் மற்றும் தகவல் அலுவலர் அண்ணா நூற்றாண்டு நூலகம் | -2 உறுப்பினர்கள் |
| (5) தமிழ் எழுத்தாளர்கள் | -2 உறுப்பினர்கள் |
| (6) ஓவியர் | -1 உறுப்பினர் |
| (7) வடிவமைப்பாளர் | -1 உறுப்பினர் |

(ii) **தமிழறிஞர்களின் தகவல்களைச் சேகரித்தல்:**

- புகைப்படங்கள்
- வாழ்க்கை வரலாறு பற்றிய சிறு குறிப்பு
- கையெழுத்து பிரதிகள்
- கையெழுத்து

(iii) **<u>அரங்கத்தின் வடிவமைப்பு:</u>**

- புகைப்படங்கள் - ஒரே அளவில் அழகியலுடன் கூடிய சட்டத்தில் அமைத்தல்.
- புகைப்படச் சட்டங்களை ஒரே நிறம், மாதிரி அமைத்தல்
- புகைப்படங்களை கால வரிசையின் படி காட்சிப்படுத்துதல்
- புகைப்படங்களைப் தகுந்த ஒளி அமைப்புகளுடன் ஏற்படுத்துதல்.

- ஒவ்வொரு தமிழறிஞர்களைப் பற்றிய சிறு குறிப்பு, கையெழுத்துப்பிரதி மற்றும் கையெழுத்தினை தெளிவாக அவர்களின் புகைப்படத்திற்கு அருகில் மாணவர்கள் அறியும் வகையில் அழகுற காட்சிப்படுத்துதல்.
- அரங்கத்தின் உட்புறச்சுவர் உட்பட அரங்கமைப்பானது தமிழ் மொழி சிறப்பினை பறைசாற்றும் வகையிலும், தமிழறிஞர்களுடன் உரையாடி உலாவும் உணர்வினை உணரும் வகையிலும் வடிவமைக்கப்படும்.
- அரங்க நுழைவானது தமிழ் கலாச்சாரத்தை எடுத்துக்காட்டும் வகையில் அமைக்கப்படும்.

(iv) <u>செந்தமிழ் சிற்பிகள் அரங்கத்தினை அமைப்பதன் மூலம்</u>

- தமிழ் மொழி சான்றோர்களின் புகைப்படம், கையெழுத்துகளை ஆவணப்படுத்துதல்
- தமிழ் மொழி சான்றோர்களை வரும் தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்துதல்
- படைப்பாளிகளின் கையெழுத்துகளை குழந்தைகள் காணச் செய்தல் மற்றும் தானும் இவ்வரிசையில் இடம் பெற வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குதல்
- இதன்மூலம் நூலகத்திற்கு வரும் வாசகர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்.

(v) <u>கால அளவு:</u>

செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம் அமைக்கும் மேற்படி பணிகள் அனைத்தும் 31.03.2022-க்குள் முடிக்கப்படும் என பொது நூலக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(vi) <u>செலவின விவரங்கள்</u>

| வ. எண். | தலைப்பு | ஒரு அலகின் தொகை | எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | படங்களுக்கான செலவு (Portrait) | 7500 | 200 | 15,00,000 |
| 2. | தகவல் பலகை அமைத்தல் (Information Board) | 5000 | 200 | 10,00,000 |
| 3. | அரங்கம் வடிவமைப்பிற்கான செலவு | - | - | 15,00,000 |
| | (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) | | மொத்தம் = | 40,00,000 |

3. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் "செந்தமிழ் சிற்பிகள் அரங்கம்" அமைக்கும் பணிகளை மேற்குறிப்பிட்ட நெறிமுறைகளின்படி ரூ.40,00,000/- (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) மதிப்பில் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குமாறு பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. பொது நூலக இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 2021-2022-ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பான "செந்தமிழ் சிற்பிகள் அரங்கம்" என்ற தலைப்பில் வெளியிட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் செந்தமிழ் சிற்பிகள் அரங்கத்தினை மேலே பத்தி 2-இல் (i) முதல் (v)-இல் குறிப்பிட்ட நெறிமுறைகளின்படி அமைக்க ஏதுவாக, பத்தி 2(vi)-இல் குறிப்பிட்டுள்ளவாறு ரூ.40,00,000/-ஐ (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து மேற்கொள்ள பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை - 2.
மாநில கணக்காயர், சென்னை–18.

**நகல்:-**
அரசு முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை - 9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஆ. மாலதி
பிரிவு அலுவலர்
25/10/2021